[1994 மே 4

517—

முசிறி தொகுதி புத்தனாம்பட்டியில் உள்ள தனியார் கல்லூரியை அரசு ஏற்று நடத்துதல்.

*10288—திரு. எம். தங்கவேல் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதி, புத்தனாம்பட்டியில் இயங்கும் தனியார் கல்லூரியில் உள்ள முறைகேடுகளைக் களைய கல்லூரியை அரசு ஏற்று நடத்த முன்வருமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதற்கான கருத்துருக்கள் கல்லூரிக் கல்வி இயக்குநரிமிருந்து 1991 ஆம் ஆண்டிலேயே பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. ஆனால் நீதிமன்றம் தடையாணை பிறப்பித்ததை முன்னிட்டு இதில் மேல்நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி தொகுதி, புத்தனாம்பட்டியில் இயங்கும் நேரு நினைவுக் கல்லூரியானது பல ஆண்டுகளாக பல பிரச்சினைகளுக்கு உள்ளாகியிருக்கிற கல்லூரியாகும். பல முறைகேடுகள் அங்கே நடைபெற்று வருகின்றன. அதனைக் களைவதற்கு அந்தக் கல்லூரியை அரசே ஏற்று நடத்துவதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையே நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5189—டாக்டர் ச. ஆரோக்கியசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

518—

திருச்சிராப்பள்ளியில் அரசு மகளிர் கல்லூரி தொடங்குதல்

*26159—டாக்டர் ச. ஆரோக்கியசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் விைாக்களுக்கு விடையளிப்பாரா—

1994 மே 4]

(அ) திருச்சிராப்பள்ளி நகரில் அரசு மகளிர் கல்லூரி ஆரம்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அம்மகளிர் கல்லூரி தொடங்கப்படும் ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரம் இன்றைக்கு மாநகராட்சியாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் உயர்த்தப்பட்டிருக்கிறது. திருச்சியைச் சுற்றி ஏறத்தாழ 150 கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களில் இருந்து வருகின்ற அந்த ஏழை மகளிர் படிப்பதற்கு தனியார் கல்லூரிகளில் அதிக நன்கொடை கேட்கிறார்கள். ஆகவே, ஏழை எளிய, தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களின் தலைவியாக இன்றைக்கு விளங்கிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் ஏழை மகளிர் சேர்ந்து பயனடையும் வகையில் அரசு மகளிர் கல்லூரி ஒன்றை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மகளிர் கல்லூரிகளிலே அதிக நன்கொடை கேட்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அப்படி இருந்தால் குறிப்பிட்டு அதைப்பற்றி புகார்கள் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். அரசின் நிதிநிலைமை அடிப்படையில் இந்த ஆண்டில் அரசு மகளிர் கல்லூரியைத் திருச்சியிலே தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வசதியான பெண்கள் மட்டும் தனியார் கல்லூரிகளிலே படிப்பதற்கு ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால் ஏழை மகளிர் படிப்பதற்கு தனியார் கல்லூரிகளிலே, வசதி

இல்லாமல் இருக்கிறார்கள். திருச்சிராப்பள்ளியிலே ஆண்களுக்கென்று பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி இருக்கிறது. அதைப் போல, மகளிருக்கென்று கல்லூரி இருந்தால், ஏழை மகளிர் படிப்பதற்கு, அந்தக் கல்லூரி பயன்படும். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர். திருச்சியிலே வசிப்பவர். ஆகையினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில் திருச்சியிலே ஒரு மகளிர் கல்லூரியை அமைப்பதற்கு மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் எண்ணித்தான், மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் அவர்கள், அவர்களது மானியக் கோரிக்கையில் பதில் அளிக்கும்போது திருச்சி, அண்ணா நகரில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது பெயரிலே மகளிர் கல்லூரி ஒன்று தொடங்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பெண்கள் பயிலுகின்ற வகையில் அங்கே இருக்கின்ற ஆண்கள் கல்லூரிகளில் 30 விழுக்காடு பெண்களை அனுமதிக்கலாம் என்று அரசு விதிமுறை செய்திருக்கிறது. இதையும் கருத்திலே கொண்டுதான் நடவடிக்கை எடுக்க முடியும். நிதிநிலை அடிப்படையிலேதான் புது கல்லூரி தொடங்குவது பற்றி அரசு பரிசீலிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 519, திரு. நா.சா. பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

519—

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தில் தார்ச்சாலையைப் புதுப்பித்தல்.

*11123—திரு. நா. சா. பழனிசாமி :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், வடக்கிபாளையம் சாலையில் சி. கோபாலபுரம் பிரிவிலிருந்து அர்த்தநாரிபாளையம் வழியாக களத்துபுதூர் வரை உள்ள தார்ச்சாலையைப் புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?